(பத்தாவது பாராளுமன்றம் - முதலாவது கூட்டத்தொடர்)

**இல. 3(9).]**

# பாராளுமன்றத்தின் 3 ஆம் ஒழுங்குப் புத்தகத்துக்கான அனுபந்தம்

## 2026 மார்ச் 20, வெள்ளிக்கிழமை வெளியிடப்பட்டது

---

## 2026 ஏப்ரல் 07, செவ்வாய்க்கிழமை

## பிரேரணை முன்னறிவித்தல்களும் தினப்பணிகளும்

*

உண்ணாட்டரசிறை (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*

சமூகப் பாதுகாப்பு உதவுதொகை அறவீடு (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*

மீட்பு, புனர்வாழ்வு மற்றும் கடனிறுக்கவகையின்மை (கூட்டிணைப்பு மற்றும் தனிப்பட்ட) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*

பிரதம அமைச்சர் மற்றும் கல்வி, உயர் கல்வி மற்றும் தொழிற் கல்வி அமைச்சர்,— தரைப்படைச் சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள்,— (357 ஆம் அத்தியாயமான) தரைப்படைச் சட்டத்தின் 29 ஆம் மற்றும் 155 ஆம் பிரிவுகளின் கீழ் பாதுகாப்பு அமைச்சரினால் ஆக்கப்பட்டு, 2025 பெப்புருவரி 15 ஆம் திகதிய 2423/34 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2026.03.17 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*

பிரதம அமைச்சர் மற்றும் கல்வி, உயர் கல்வி மற்றும் தொழிற் கல்வி அமைச்சர்,— கடற்படைச் சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள்,— (358 ஆம் அத்தியாயமான) கடற்படைச் சட்டத்தின் 161 ஆம் பிரிவின் கீழ் பாதுகாப்பு அமைச்சரினால் ஆக்கப்பட்டு, 2025 பெப்புருவரி 15 ஆம் திகதிய 2423/35 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2026.03.17 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*

பிரதம அமைச்சர் மற்றும் கல்வி, உயர் கல்வி மற்றும் தொழிற் கல்வி அமைச்சர்,— வான்படைச் சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள்,— (359 ஆம் அத்தியாயமான) வான்படைச் சட்டத்தின் 29 ஆம் மற்றும் 155 ஆம் பிரிவுகளின் கீழ் பாதுகாப்பு அமைச்சரினால் ஆக்கப்பட்டு, 2025 பெப்புருவரி 15 ஆம் திகதிய 2423/36 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2026.03.17 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*

பிரதம அமைச்சர் மற்றும் கல்வி, உயர் கல்வி மற்றும் தொழிற் கல்வி அமைச்சர்,— இலங்கை மத்திய வங்கிச் சட்டத்தின் சட்டத்தின் கீழ் விதிகள்,— 2023 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க இலங்கை மத்திய வங்கிச் சட்டத்தின் பிரிவு 7(1)(இ) மற்றும் பகுதி VI என்பவற்றுடன் சேர்த்து வாசிக்கப்படும் 105 ஆம் பிரிவின் கீழ் ஏற்றுமதிப் பெறுகைகளை இலங்கைக்குத் திருப்பியனுப்புதல் விதிகள் தொடர்பாக ஆளும் சபையின் தலைவரும் இலங்கை மத்திய வங்கியின் ஆளுநரால் ஆக்கப்பட்டு, 2026 சனவரி 30 ஆம் திகதிய 2473/30 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2026.03.17 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான விதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*

பிரதம அமைச்சர் மற்றும் கல்வி, உயர் கல்வி மற்றும் தொழிற் கல்வி அமைச்சர்,— செயல்நுணுக்க அபிவிருத்திக் கருத்திட்டங்கள் சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதி,— 2008 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க செயல்நுணுக்க அபிவிருத்திக் கருத்திட்டங்கள் சட்டத்தின் பிரிவு 3 உடன் சேர்த்து வாசிக்கப்படும் பிரிவு 4ஊ இன் கீழ் தகுதிபெறுவதற்கான அளவுகோல்களையும், வரி விலக்களிப்புகள் அல்லது வரிச் சலுகைகள் தொடர்பில் நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சரால் ஆக்கப்பட்டு, 2026 பெப்ரவரி 08 ஆம் திகதிய 2474/66 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2026.03.19 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதி அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*

இளைஞர் விவகாரங்கள் மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சர்,— விளையாட்டில் ஊக்குப் பதார்த்தப் பயன்பாட்டிற்கெதிரான சமவாயச் சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள்,— 2013 ஆம் ஆண்டின் 33 ஆம் இலக்க, விளையாட்டில் ஊக்குப் பதார்த்தப் பயன்பாட்டிற்கெதிரான சமவாயச் சட்டத்தின் 3 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படுவதாகிய 34 ஆம் பிரிவின் கீழ் தடைசெய்யப்பட்ட பொருட்களின் பட்டியல்-2026 தொடர்பாக இளைஞர் விவகாரங்கள் மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சரால் ஆக்கப்பட்டு, 2026 சனவரி 16 ஆம் திகதிய 2471/51 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2026.03.17 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*** அரசாங்க அலுவல்களைக் குறிக்கின்றது.**

---

# எழுத்துமூல விடைக்கான வினாக்கள்

## (2026 ஏப்ரல் 07, செவ்வாய்க்கிழமை)

1849/2026

கௌரவ அஜித் பி. பெரேரா,— நீதி மற்றும் தேசிய ஒருமைப்பாட்டு அமைச்சரைக் கேட்பதற்கு,— (3)

(அ) (i) கடன் இணக்கக் கட்டளைச் சட்டம் மற்றும் அதன் நடவடிக்கைமுறைகளை மீளாய்வு செய்வதற்காக நியமிக்கப்பட்ட குழுவின் 2025.07.15 ஆம் திகதிய அறிக்கை கிடைக்கப் பெற்றுள்ளதா என்பதையும்;

(ii) ஆமெனில், மேற்படிக் குழுவின் அங்கத்தவர்கள் யாவர் என்பதையும்;

(iii) மேற்படிக் குழுவின் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள பிரதான விதப்புரைகள் யாவை என்பதையும்;

(iv) அவ்விதப்புரைகளின் பிரகாரம், இதுவரையில் மேற்கொள்ளப்பட்டுள்ள நிருவாக மாற்றங்கள் யாவை என்பதையும்;

(v) குழுவின் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள விதப்புரைகளின் பிரகாரம், மேற்கொள்வதற்கு உத்தேசித்துள்ள சட்டரீதியான திருத்தங்கள் யாவை என்பதையும்;

(vi) அத்திருத்தங்கள் தொடர்பாக தற்போது நிலவும் முன்னேற்றம் யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) கடன் இணக்கச் சபை அங்கத்தவர்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(ii) அவர்களின் பெயர்கள் யாவையென்பதையும்;

(iii) கடன் இணக்கச் சபைக்கு சேவை இணைப்புச் செய்யப்பட்டுள்ள பணியாளர்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(iv) கடன் இணக்கச் சபைக்கு அரசாங்கத்தால் ஒதுக்கப்பட்டுள்ள 2026 ஆம் ஆண்டிற்கான நிதி ஒதுக்கீட்டின் அளவு யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

1865/2026

கௌரவ அஜித் பி. பெரேரா,— கமத்தொழில், கால்நடை வளங்கள், காணி மற்றும் நீர்ப்பாசன அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) 1998 இன் 21 ஆம் இலக்க உரித்துப் பதிவுச் சட்டத்தின் கீழ் உரித்துச் சான்றிதழ் வழங்குவதை அமுல்படுத்துகின்ற பிரதேச செயலாளர் பிரிவுகள் யாவை;

(ii) இதுவரை மேற்படி சட்டத்தின் கீழ் வழங்கப்பட்டுள்ள உரித்துச் சான்றிதழ்களின் எண்ணிக்கை யாது;

(iii) காணி உரித்து நிர்ணய திணைக்களத்தின் கீழ் தற்போது சேவையாற்றி வருகின்ற ஊழியர்களின் எண்ணிக்கை யாது;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா;

(ஆ) (i) 1998 இன் 21 ஆம் இலக்க உரித்துப் பதிவுச் சட்டத்தின் சட்டரீதியான அந்தஸ்தை இற்றைப்படுத்த உத்தேசிக்கப்பட்டுள்ளதா;

(ii) ஆமெனில், உத்தேச சட்ட மறுசீரமைப்புக்கள் யாவை;

(iii) மேற்படி சட்ட மறுசீரமைப்புக்களை துரிதப்படுத்துவதற்காக மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் யாவை;

என்பதையும் அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா;

(இ) இன்றேல், ஏன்?

1866/2026

கௌரவ அஜித் பி. பெரேரா,— பிரதம அமைச்சர் மற்றும் கல்வி, உயர் கல்வி மற்றும் தொழிற்கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) ‘Clean Sri Lanka’ சனாதிபதி செயலணியின் தற்போதைய அங்கத்தவர்கள் யாவர் என்பதையும்;

(ii) தற்போதுவரை மேற்படி கருத்திட்டத்தின் கீழ் நடைமுறைப்படுத்தப்பட்டு, நிறைவு செய்யப்பட்டுள்ள கருத்திட்டங்கள் யாவை என்பதையும்;

(iii) அவ்வாறு நிறைவு செய்யப்பட்ட கருத்திட்டங்களுக்காக செலவிடப்பட்ட நிதி எவ்வளவு என்பதையும்;

(iv) அக்கருத்திட்டங்களுக்காக செலவிடப்பட்ட நிதி ஒவ்வொரு கருத்திட்டம் வாரியாக வெவ்வேறாக எவ்வளவு என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) 2024.12.19 ஆம் திகதிய 2415/59 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிக்கையில் I தொடக்கம் IX வரை விபரிக்கப்பட்டுள்ள ஒவ்வொரு பணியினதும் தற்போதைய முன்னேற்றம் மற்றும் அதற்காக செலவிடப்பட்டுள்ள நிதி வெவ்வேறாக எவ்வளவு என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

1930/2026

கௌரவ அஜித் பி. பெரேரா,— நீதி மற்றும் தேசிய ஒருமைப்பாட்டு அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2024 ஆம் ஆண்டின் 43 ஆம் இலக்க குடியியல் நடவடிக்கைமுறைச் சட்டக்கோவை (திருத்தச்) சட்டத்தின் மூலம், குடியியல் நடவடிக்கைமுறைச் சட்டக்கோவையின் 9(அ) பிரிவைத் திருத்தி, முறைப்பாட்டாளரின் முகவரியின் அடிப்படையில் மாவட்ட நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்வதற்கு அவகாசமளித்தல் பொருத்தமற்றது எனவும்;

(ii) மேற்படி 9(அ) பிரிவைத் திருத்தி சட்டத்தை முன்பிருந்த நிலைக்குக் கொண்டு செல்ல வேண்டுமென இலங்கைச் சட்டத்தரணிகள் சங்கத்தால் வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது என்பதையும்;

(iii) மேற்படி திருத்தத்தைத் துரிதமாக மேற்கொள்வதாக பாராளுமன்றத்தில் பலமுறை தெரிவித்துள்ளார் என்பதையும்;

அவர் ஏற்றுக்கொள்வாரா?

(ஆ) ஆமெனில், அது தொடர்பான தற்போதைய முன்னேற்றம் யாதென்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

---

## 2026 மே 05, செவ்வாய்க்கிழமை

## வாய்மூல விடைக்கான வினாக்கள்

107/2024

கௌரவ நலீன் பண்டார ஜயமஹ,— வலுசக்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) 2015 ஆம் ஆண்டிலிருந்து இதுவரை, இலங்கை மின்சார சபை ஈட்டியுள்ள இலாபம் அல்லது அடைந்த நட்டம் ஆண்டு வாரியாக வெவ்வேறாக எவ்வளவு என்பதையும்;

(ii) நட்டம் அடைந்திருப்பின், அதில் தாக்கம் செலுத்தியுள்ள காரணிகள் யாவை என்பதையும்;

(iii) மின்சார சபை தற்போது இலாபம் ஈட்டுகின்றதாயின், அதன்மூலம் மின்சாரப் பாவனையாளர்களுக்கு ஏதேனும் சலுகை வழங்க நடவடிக்கை எடுக்கப்படுமா என்பதையும்;

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஆ) (i) 2015 ஆம் ஆண்டிலிருந்து இதுவரை, மின்சார சபையினால் கம்பெனிகளுக்குச் செலுத்தியுள்ள பணத் தொகை எவ்வளவு என்பதையும்;

(ii) அத்தகைய கம்பெனிகளுடன் நிறைவேற்றிக்கொண்டுள்ள உடன்படிக்கைகள் தொடர்பான மீளாய்வு அல்லது மதிப்பீடு செய்யப்பட்டுள்ளதா என்பதையும்;

(iii) அவ்வாறாயின், அவ்விடயம் தொடர்பில் அமைச்சின் நிலைப்பாடு யாதென்பதையும்;

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

233/2024

கௌரவ அஜித் பி. பெரேரா,— நீதி மற்றும் தேசிய ஒருமைப்பாட்டு அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) மேல் மாகாணத்தில் சிவில் மேன்முறையீட்டு அதிகாரத்தை நடைமுறைப் படுத்துகின்ற மாகாண மேல் நீதிமன்றத்தை பாணந்துறை நீதிமன்ற வளாகத்தில் தாபிப்பதற்கு விதப்புரை வழங்கப்பட்டுள்ளதை அறிவாரா என்பதையும்;

(ii) அந்த விதப்புரையை நடைமுறைப்படுத்துவதற்கு இற்றைவரை மேற்கொள்ளப்பட்டுள்ள நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

(iii) பாணந்துறை, ‘சிவில் மேன்முறையீட்டு மேல்நீதிமன்றத்தை’ இயன்றளவு விரைவில் தாபிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமா என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

361/2024

கௌரவ சாணக்கியன் ராஜபுத்திரன் இராசமாணிக்கம்,— நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 'த பினான்ஸ்' நிறுவனத்தை மறுசீரமைப்பதற்கு அமைச்சரவையின் அனுமதி கோரப்பட்டுள்ளதாக 2021.02.10 ஆம் திகதி பாராளுமன்றத்தில் அப்போதைய விடயத்திற்குப் பொறுப்பான இராஜாங்க அமைச்சர் அவர்கள் கூற்றொன்றை வெளியிட்டதை அமைச்சர் அறிவாரா என்பதையும்;

(ii) மேற்படி அனுமதி வழங்கப்பட்ட திகதி மற்றும் தகுதியான முதலீட்டாளர் ஒருவரை அழைத்த திகதி யாதென்பதையும்;

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) மேற்படி நிறுவனத்தை கலைப்பதற்காக இலங்கை மத்திய வங்கி 2021.02.15 ஆம் திகதி வர்த்தக மேல் நீதிமன்றத்தில் வழக்கொன்றைத் தாக்கல் செய்துள்ளதாகவும்;

(ii) அது மேற்படி கூற்றுக்கு முரணானது என்பதையும்;

அவர் ஏற்றுக்கொள்வாரா?

(இ) (i) இலங்கை வைப்புக் காப்புறுதி மற்றும் திரவத்தன்மை உதவித் திட்டத்திலிருந்து பாதிக்கப்பட்ட வைப்பாளர் ஒருவருக்கு ரூ. 500,000/- வீதம் செலுத்தப்படும் திகதி யாதென்பதையும்;

(ii) மேற்படி நிதியத்தின் பணத்தைப் பயன்படுத்தி வைப்பாளர்களின் முழுமையான பணத்தைச் செலுத்த முடியுமா என்பதையும்;

(iii) இன்றேல், அதற்கான காரணங்கள் யாவையென்பதையும்;

(iv) 2019 சனவரி மாதம் விசேட நிலையான வைப்பு வசதிகள் விகிதத்தின் கீழ் மாதத்திற்கு ஒரு பில்லியன் ரூபா என்ற அடிப்படையில் மத்திய வங்கி 950 மில்லியன் ரூபாவிற்கும் அதிகமான தொகையை ஈட்டுவதற்கு 'த பினான்ஸ் நிறுவனத்திற்கு' இடமளித்து, பின்னர் அதன் உரிமத்தை இரத்துச் செய்ததை அவர் அறிவாரா என்பதையும்;

(v) ஆமெனில், இது தொடர்பாக மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் யாவையென்பதையும்;

அவர் குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

467/2025

கௌரவ ரவி கருணாநாயக்க,— வெளிநாட்டலுவல்கள், வெளிநாட்டு வேலைவாய்ப்பு மற்றும் சுற்றுலா அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2020 ஆம் ஆண்டில் இருந்து இற்றைவரைக்குமாகவும் பதிவுசெய்யப்பட்டுள்ள நட்சத்திர வகுப்பு ஹோட்டல்களின் எண்ணிக்கையினையும் அவை செயற்பட்டு வரும் வருடங்களையும், அவற்றிலுள்ள அறைகளின் எண்ணிக்கையினையும் அங்குள்ள நேரடியான மற்றும் மறைமுகமான ஊழியர்களின் எண்ணிக்கையினை மாவட்ட வாரியாகவும்;

(ii) இதே காலப்பகுதிக்காகப் பதிவுசெய்யப்பட்ட Airbnb இணையத்தளங்களின் எண்ணிக்கையினையும்;

(iii) 2010 ஆம் ஆண்டிலிருந்து இற்றைவரையான சுற்றுலாப் பயணிகளின் வருகையினையும் மொத்த ஈட்டல்களையும் தலா நபர் ஈட்டல்களையும்;

(iv) இயங்குகின்ற Booking.com நிறுவனங்களின் எண்ணிக்கையினையும்;

(v) அவை ஈட்டிய தொகை மற்றும் செலுத்திய வரிகளையும்;

அவர் வெவ்வேறாகக் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) விஜயம் செய்யும் சுற்றுலாப் பயணிகள் சராசரியாகத் தங்கியிருக்கும் காலம்;

(ii) வருடாந்தம் மீண்டும் வருகை தருவோரின் எண்ணிக்கை;

(iii) 2020 ஆம் ஆண்டில் இருந்து இற்றைவரை சிங்கப்பூர், தாய்லாந்து, ஜப்பான், அமெரிக்கா, சீனா, இங்கிலாந்து, மலேசியா, துபாய், இந்தியா, துருக்கி, இந்தோனேசியா, அவுஸ்திரேலியா, வியட்நாம், பிரான்ஸ், மற்றும் கனடா ஆகிய நாடுகளில் இருந்து வருகை தந்தவர்களின் எண்ணிக்கையினை வெவ்வேறாகவும்;

அவர் குறிப்பிடுவாரா?

(இ) (i) சுற்றுலாத் தொழிற்துறையின் பலவீனத்தையும்;

(ii) அதன் பாதகமான தாக்கத்தினையும்;

(iii) இவ்வாறான பலவீனங்களை நிவர்த்திசெய்ய எடுக்கப்பட்ட நடவடிக்கைகளையும்;

அவர் மேலும் குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

568/2025

கௌரவ ரோஹண பண்டார,— வலுசக்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2024 ஆம் ஆண்டளவில் இலங்கை மின்சார சபை அரச வங்கிகளில் கடனைப் பெற்றுக்கொண்டுள்ளதா என்பதையும்;

(ii) ஆமெனின், அவ்வங்கிகளின் பெயர்கள் யாவை என்பதையும்;

(iii) பெறப்பட்ட கடன்களில் தற்போது செலுத்த வேண்டிய கடன் தொகை எவ்வளவு என்பதையும்;

(iv) மின்சார சபை வங்கிகளில் கடன் பெற்றுக்கொள்வதை குறைப்பதற்கு அமைச்சினால் மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

642/2025

கௌரவ கிங்ஸ் நெல்சன்,— வலுசக்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2025.02.09 ஆம் திகதி இலங்கை முழுவதுமாக மின் தடை ஏற்பட்டமையை அறிவாரா என்பதையும்;

(ii) அது தொடர்பாக விசாரணைகளை மேற்கொள்வதற்கு வலுசக்தி அமைச்சினாலும் இலங்கை மின்சார சபையினாலும் நியமிக்கப்பட்ட குழுக்களின் எண்ணிக்கை வெவ்வேறாக எத்தனையென்பதையும்;

(iii) மேற்படி ஒவ்வொரு குழுவினதும் அங்கத்தவர்களின் பெயர்கள் வெவ்வேறாக யாவை என்பதையும்;

(iv) மேற்படி குழுக்களின் அறிக்கைகள் மூலமாக வெளிக்கொணரப்பட்டுள்ள விடயங்கள் யாவை என்பதையும்;

(v) மேற்படி மின்சாரத் தடைக்கு நேரடியாக பொறுப்புக்கூற வேண்டிய அலுவலர்களின் பெயர்கள் மற்றும் பதவிப் பெயர்கள் யாவை என்பதையும்;

(vi) மேற்படி குழுக்களின் அறிக்கைகள் மூலமாக வெளிக்கொணரப்பட்டுள்ள விடயங்கள் தொடர்பாக மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

1176/2025

கௌரவ சட்டத்தரணி தயாசிறி ஜயசேக்கர,— பிரதம அமைச்சர் மற்றும் கல்வி, உயர் கல்வி மற்றும் தொழிற் கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) தற்போதைய சபாநாயகரின் தனிப்பட்ட பணியாட்டொகுதியின் ஊழியர்களின் எண்ணிக்கை, அவர்களின் பதவிப் பெயர்கள் மற்றும் கல்வித் தகைமைகள் வெவ்வேறாக யாதென்பதையும்;

(ii) சபாநாயகரின் உத்தியோகபூர்வ இல்லமாக 'சபாநாயகர் உத்தியோகபூர்வ இல்லம்' பயன்படுத்தப்படுகின்றதா என்பதையும்;

(iii) அந்த உத்தியோகபூர்வ இல்லத்திற்கு சபாநாயகரால் நியமிக்கப்பட்டுள்ள ஊழியர்களின் எண்ணிக்கை, அவர்களின் பெயர்கள், பதவிகள் மற்றும் கல்வித் தகைமைகள் யாவையென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) சபாநாயகர் மற்றும் அவரது ஊழியர்களின் பயன்பாட்டிற்காக வழங்கப்பட்டுள்ள வாகனங்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(ii) அந்த வாகனங்களின் இலக்கங்கள், வகைகள் மற்றும் மாதாந்த எரிபொருள் கோட்டா வாகனங்களுக்கு ஏற்ப வெவ்வேறாக யாதென்பதையும்;

(iii) அந்த வாகனங்களுக்கு எரிபொருள் எவ்வாறு பெற்றுக்கொள்ளப்படுகிறது என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) (i) கொழும்பு 04, லோரிஸ் ஒழுங்கையில் அமைந்துள்ள பொது நிர்வாக, மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சுக்குச் சொந்தமான அடுக்குமாடி குடியிருப்பு வளாகத்தில் சபாநாயகரால் ஒரு வீடு பயன்படுத்தப்பட்டுள்ளதா என்பதையும்;

(ii) அவ்வீடு தற்போதும் பயன்படுத்தப்பட்டு வருகின்றதா என்பதையும்;

(iii) அவ்வீட்டின் வாடகை, நீர் மின் பட்டியலுக்கான செலுத்துகைகள் யாரால் செய்யப்படுகின்றது என்பதையும்;

அவர் மேலும் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

1632/2025

கௌரவ சாமர சம்பத் தசநாயக,— பிரதம அமைச்சர் மற்றும் கல்வி, உயர் கல்வி மற்றும் தொழிற் கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) கடந்த 03 ஆண்டுகளில் க.பொ.த (சாதாரண தர) பரீட்சைக்குத் தோற்றிய மொத்த மாணவர்களின் எண்ணிக்கை;

(ii) மேற்படி மாணவர்களில் க.பொ.த (உயர்தர) பரீட்சைக்குத் தோற்றிய மாணவர்களின் எண்ணிக்கை;

(iii) மேலே (i) மற்றும் (ii) இல் குறிப்பிடப்பட்டுள்ள மாணவர்களின் எண்ணிக்கை, அந்தந்த ஆண்டுகளில் ஆரம்பப் பிரிவில் அனுமதிக்கப்பட்ட மாணவர் எண்ணிக்கையின் சதவீதமாக;

ஒவ்வொரு ஆண்டுவாரியாக வெவ்வேறாக எவ்வளவு என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

1935/2026

கௌரவ அஜித் கிஹான்,— கடற்றொழில், நீரியல் மற்றும் கடல் வளங்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இலங்கை தேசிய நீர் உயிரின வளர்ப்பு அபிவிருத்தி அதிகாரசபையானது நாட்டின் நன்னீர் மீன்பிடி, இறால் மற்றும் அலங்கார மீன் வளர்ப்புக் கைத்தொழில்களுக்கு பொறுப்பாகவுள்ள நிறுவனம் என்பதை அவர் அறிவாரா;

(ii) ஆமெனில், மேற்படி அதிகாரசபை கடந்த ஆட்சிக் காலத்தில் குறித்த துறைகளின் தேவைகளுக்கு அமைய வசதிகளை செய்து கொடுத்துள்ளதா;

(iii) அதிகாரசபைக்குச் சொந்தமாகக் காணப்படுகின்ற மீன் மற்றும் இறால் இனப்பெருக்க நிலையங்களின் எண்ணிக்கை எத்தனை;

(iv) நாட்டில் வளர்ப்புக்குப் போதுமான மீன் மற்றும் இறால் குஞ்சுகளை வழங்கும் இயலுமையை அதிகாரசபை கொண்டுள்ளதா;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) அதிகாரசபையில், கடந்த காலத்தில் நிதி மோசடிகள் இடம்பெற்றுள்ளனவா;

(ii) அதிகாரசபையானது நீர் உயிரின வளர்ப்புத் துறையை அபிவிருத்தி செய்வதற்கான வேலைத்திட்டமொன்றைக் கொண்டுள்ளதா;

என்பதையும் அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

1947/2026

கௌரவ எஸ்.எம். மரிக்கார்,— துறைமுகங்கள் மற்றும் சிவில் விமான சேவைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) ஸ்ரீலங்கன் விமான சேவை நிறுவனம் 2019 ஜனவரி 01ஆம் திகதி தொடக்கம் இதுவரையில் அடைந்துள்ள முழுமையான நட்டம் எவ்வளவு என்பதையும்;

(ii) அதில் தொழிற்பாட்டு நட்டம் எவ்வளவு என்பதையும்;

(iii) மேற்படி நிறுவனத்தால் விமானங்களுக்காகச் செலுத்தப்படும் வருடாந்தக் குத்தகைத் தவணை/கடன் தவணைக் கொடுப்பனவு எவ்வளவு என்பதையும்;

(iv) மேற்படி குத்தகைத் தவணை/கடன் தவணைக் கொடுப்பனவு செலுத்தப்படும் விமானங்களின் எண்ணிக்கை எத்தனை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) மேற்படி நிறுவனம் பெற்றுக்கொண்டுள்ள மொத்தக் கடன் தொகை எவ்வளவு என்பதையும்;

(ii) மேற்படி கடனுக்காக வருடாந்தம் செலுத்த வேண்டிய மொத்தக் கடன் தொகை எவ்வளவு என்பதையும்;

(iii) மேற்படிக் கடன் தவணையில் உள்ள மூலதனத் தொகை மற்றும் வட்டித் தொகை வெவ்வேறாக எவ்வளவு என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

---

## 2026 மே 06, புதன்கிழமை

# வாய்மூல விடைக்கான வினாக்கள்

885/2025

கௌரவ (கலாநிதி) எம். எல். ஏ. எம். ஹிஸ்புல்லா,— கமத்தொழில், கால்நடை வளங்கள், காணி மற்றும் நீர்ப்பாசன அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) அரசாங்கத்தால் வழங்கப்படுகின்ற 'அளிப்புப் பத்திரம்' அல்லது 'காணி உரிமம்' இல்லாது மட்டக்களப்பு மாவட்டத்தின், கோறளைப்பற்று, வாழைச்சேனை பிரதேச செயலகப் பிரிவிலுள்ள அரசாங்க காணிகளில் ஆட்கள் குடியிருக்கின்றமையை அறிவாரா என்பதையும்;

(ii) ஆமெனில், மேற்படி ஆட்களின் எண்ணிக்கை, அவர்களின் பெயர்கள் மற்றும் ஏற்புடைய விபரங்கள் யாவை என்பதையும்;

(iii) மேற்படி அரசாங்க காணிகளிலிருந்து மேற்குறிப்பிட்ட ஆட்களை சட்டரீதியாக வெளியேற்றுவதற்கு 2017.01.01 தொடக்கம் 2025.03.31 ஆம் திகதி வரையான காலப்பகுதியில் ஏற்புடைய பிரதேச செயலாளர் அவர்களுக்கெதிராக நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்துள்ளாரா என்பதையும்;

(iv) ஆமெனில், மேற்படி ஆட்களின் எண்ணிக்கை, அவர்களின் பெயர்கள் மற்றும் சம்பந்தப்பட்ட விபரங்கள் யாவை என்பதையும்;

(v) உரிய பிரதேச செயலாளரால் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ள ஆட்களில் மேற்குறிப்பிட்ட காலப்பகுதியில் நீதிமன்ற உத்தரவுகளுக்கமைய அரசாங்க காணிகளிலிருந்து வெளியேற்றப்பட்ட ஆட்களின் எண்ணிக்கை, அவர்களின் பெயர்கள் மற்றும் ஏற்புடைய விபரங்கள் யாவை என்பதையும்;

(vi) வழக்குத் தாக்கல் செய்யவேண்டி இருப்பினும் ஏற்புடைய பிரதேச செயலாளரினால் வழக்குத் தாக்கல் செய்யப்படாத ஆட்கள் இருக்கின்றார்களா என்பதையும்;

(vii) ஆமெனில், மேற்படி ஆட்களின் எண்ணிக்கை, அவர்களின் பெயர்கள் மற்றும் சம்பந்தப்பட்ட விபரங்கள் யாவை என்பதையும்;

(viii) சிலருக்கு எதிராக மாத்திரம் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டமைக்கும், கூடுதலான ஆட்களுக்கெதிராக வழக்குத் தாக்கல் செய்யப்படாமைக்குமான காரணங்கள் யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

1033/2025

கௌரவ (திருமதி) ரோஹினீ குமாரி விஜேரத்ன,— பொதுநிர்வாக, மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) லக்கல பேருந்து தரிப்பிடம் நிர்மாணிக்கப்பட்ட திகதி யாதென்பதையும்;

(ii) மேற்படி பேருந்து தரிப்பிடத்தை நிர்மாணிப்பதற்காக செலவிடப்பட்ட பணத்தொகை எவ்வளவு என்பதையும்;

(iii) அங்கு போதியளவு வசதிகள் இல்லாததை அறிவாரா என்பதையும்;

(iv) ஆமெனில், அது தொடர்பாக மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் யாவையென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

1247/2025

கௌரவ சுசந்த குமார நவரத்ன,— வர்த்தக, வாணிப, உணவுப் பாதுகாப்பு மற்றும் கூட்டுறவு அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இலங்கையில் உள்ள அனைத்து பொருளாதார மத்திய நிலையங்களையும் ஒருங்கிணைத்து தனியார் நிறுவனமொன்றை தாபிப்பதற்கான ஆயத்தம் உள்ளதா என்பதையும்;

(ii) அவ்வாறெனில், அந்த நிறுவனம் தாபிக்கப்படும் முறையியல் யாது என்பதையும்;

(iii) அந்த நிறுவனத்தின் கட்டமைப்பு யாது என்பதையும்;

(iv) அந்த நிறுவனத்தை தாபிப்பதால் கிடைக்கப்பெறும் நன்மைகள் யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

1374/2025

கௌரவ (திருமதி) சட்டத்தரணி சமிந்திரானி கிரிஎல்லே,— வீடமைப்பு, நிர்மாணிப்பு மற்றும் நீர் வழங்கல் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) கண்டி மாவட்டத்தின், உடகம கிராமத்தில் வசிக்கும் மக்கள் தற்போது பாரிய குடிநீர்ப் பிரச்சினைக்கு முகம்கொடுத்துள்ளதை அறிவாரா என்பதையும்;

(ii) ஆமெனில், மேற்படி குடிநீர்ப் பிரச்சினையைத் தீர்ப்பதற்காக எடுக்கப்படும் நடவடிக்கைகள் யாவையென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

1763/2025

கௌரவ லால் பிரேமநாத்,— பெருந்தோட்ட மற்றும் சமூக உட்கட்டமைப்பு வசதிகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2025 ஆம் ஆண்டின் வரவு செலவுத் திட்டத்தில் தேயிலைக் கைத்தொழிலின் அபிவிருத்திக்காகவும் முன்னேற்றத்திற்காகவும் ஒதுக்கப்பட்டிருந்த மொத்த நிதி எவ்வளவு என்பதையும்;

(ii) அந்த மொத்த நிதியில் மாகாண வாரியாக ஒதுக்கப்பட்டிருந்த தொகை வெவ்வேறாக எவ்வளவு என்பதையும்;

(iii) நுவரெலியா, பதுளை, மாத்தளை, இரத்தினபுரி, காலி மற்றும் மாத்தறை ஆகிய ஒவ்வொரு மாவட்டத்திற்குமென ஒதுக்கப்பட்ட நிதி வெவ்வேறாக எவ்வளவு என்பதையும்;

(iv) புதிய பயிர்ச்செய்கை, மீள் பயிர்ச்செய்கை, தொழிற்சாலை நவீனமயப்படுத்தல் மற்றும் தொழில்நுட்ப விருத்தி, ஆராய்ச்சி மற்றும் தேயிலைச் செய்கை மேம்பாடு, சந்தைப்படுத்தல் மற்றும் சந்தை மேம்படுத்தல், சிறிய மற்றும் நடுத்தர செய்கையாளர்களுக்கு மானியம் வழங்குதல் அத்துடன் சம்பந்தப்பட்ட பிற துறைகளுக்கு ஏற்றவாறு மேற்படி நிதியில் பயன்படுத்த திட்டமிடப்படுள்ள சதவீதம் ஆகியவை வெவ்வேறாக எவ்வளவு என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) 2026 ஆம் ஆண்டுக்குரிய வரவு செலவுத் திட்டத்தினால் தேயிலைக் கைத்தொழிலுக்காக ஒதுக்கப்பட்டுள்ள மொத்த நிதி எவ்வளவு என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

## 2026 மே 07, வியாழக்கிழமை

## வாய்மூல விடைக்கான வினாக்கள்

765/2025

கௌரவ (டாக்டர்) கவிந்த ஹேஷான் ஜயவர்தன,— பொதுமக்கள் பாதுகாப்பு மற்றும் பாராளுமன்ற அலுவல்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) உயிர்த்த ஞாயிறு தாக்குதலுக்குப் பின்னர், அந்த சம்பவம் தொடர்பாக ஆரம்பிக்கப்பட்ட விசாரணை நடவடிக்கைகளின் ஆரம்ப கட்டங்களில் ஈடுபட்டிருந்த அலுவலர்களின் எண்ணிக்கை யாது;

(ii) மேற்படி அலுவலர்களில், பின்னர் குறித்த விசாரணை நடவடிக்கைகளிலிருந்து நீக்கப்பட்ட அலுவலர்களின் எண்ணிக்கை யாது;

(iii) அவ்வாறு அலுவலர்களை விசாரணை நடவடிக்கைகளிலிருந்து நீக்கியமைக்கான காரணங்கள் யாவை;

(iv) மேற்படி (ii) இல் குறிப்பிடப்பட்டுள்ள அலுவலர்களை விசாரணை நடவடிக்கைகளுடன் மீண்டும் இணைத்துக் கொள்ள நடவடிக்கை மேற்கொள்ளப்படுமா;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா;

(ஆ) இன்றேல், ஏன்?

815/2025

கௌரவ ஹெக்டர் அப்புஹாமி,— வெளிநாட்டலுவல்கள், வெளிநாட்டு வேலைவாய்ப்பு மற்றும் சுற்றுலா அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2015 ஆம் ஆண்டு முதல் இற்றைவரை இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகத்தில் பதிவு செய்து வீட்டுப் பணிப்பெண்களாக வெளிநாடு சென்றுள்ளவர்களின் எண்ணிக்கை ஆண்டுவாரியாக வெவ்வேறாக யாது;

(ii) மேற்படி எண்ணிக்கை, ஒவ்வொரு நாடு வாரியாக வெவ்வேறாக யாது;

(iii) அவர்களின் தகவல்கள் இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகத்தின் தரவுத் தளத்தில் பதிவேற்றம் செய்யப்பட்டுள்ளனவா;

(iv) ஆவர்களில் உயிரிழந்த, தற்கொலை செய்துகொண்ட மற்றும் வேறு விபத்துக்கள் காரணமாக பாதிக்கப்பட்டுள்ளவர்களின் எண்ணிக்கை வெவ்வேறாக யாது;

(v) அவர்களின் நலன்புரிக்காக இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகம் மேற்கொள்ளும் நடவடிக்கைகள் யாவை;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

840/2025

கௌரவ முஜிபுர் ரஹுமான்,— பிரதம அமைச்சர் மற்றும் கல்வி, உயர் கல்வி மற்றும் தொழிற் கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) மொரட்டுவை, தர்மரதன வித்தியாலயம், லக்ஷபதிய சிக்ஷாதான வித்தியாலயம் மற்றும் சுனந்தோபனந்த ஆரம்பப் பாடசாலை ஆகிய பாடசாலைகளில் தற்போது கல்வி பயிலும் மாணவர்களின் எண்ணிக்கை வெவ்வேறாக யாதென்பதையும்;

(ii) மேற்படி பாடசாலைகள் தற்போது மூடப்படும் நிலைக்கு தள்ளப்பட்டுள்ளமையை அறிவாரா என்பதையும்;

(iii) ஆமெனில், அது தொடர்பாக எடுக்கப்படும் நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

1016/2025

கௌரவ றஜீவன் ஜெயச்சந்திரமூர்த்தி,— பொதுமக்கள் பாதுகாப்பு மற்றும் பாராளுமன்ற அலுவல்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) கடந்த மூன்று ஆண்டுகளில், பெண்களுக்கு எதிராக நடந்துகொண்டிருக்கும் இணையக் குற்ற வழக்குகளில், தீர்க்கப்பட்ட மற்றும் விசாரணைக்காக அல்லது வழக்குத் தொடருதலுக்காக நிலுவையில் உள்ள இணையக் குற்ற வழக்குகளின் எண்ணிக்கையினை ஒவ்வொரு மாகாணத்திற்குமென வெவ்வேறாகவும்;

(ii) அத்தகைய வழக்குகளைத் தீர்ப்பதற்கு எடுக்கும் சராசரி காலம் யாதென்பதையும்;

(iii) வட மாகாணம் உட்பட ஒவ்வொரு மாகாணத்திலும் அவ்வகையான வழக்குகளை விசாரிக்க பிரத்தியேக இணையக் குற்றத் தடுப்புப் பிரிவுகள் நிறுவப்பட்டுள்ளனவா என்பதையும்;

(iv) செயற்கை நுண்ணறிவு (AI) அடிப்படையிலான கண்காணிப்பு அமைப்புக்கள், பொது மக்கள் விழிப்புணர்வுத் திட்டங்கள் மற்றும் இறுக்கமான அமுலாக்க நடவடிக்கைகள் மூலம் பெண்களுக்கான டிஜிட்டல் பாதுகாப்பை வலுப்படுத்த ஏதேனும் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளனவா என்பதையும்;

(v) அவ்வாறெனில், அத்தகைய முன்னெடுப்புக்களின் விபரங்கள் யாவை என்பதையும்;

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

1188/2025

கௌரவ சிவஞானம் சிறீதரன்,— பொதுமக்கள் பாதுகாப்பு மற்றும் பாராளுமன்ற அலுவல்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா மற்றும் மன்னார் ஆகிய மாவட்டங்களில் சிவில் பாதுகாப்பு திணைக்களத்தினால் விவசாயப் பண்ணைகள் நடத்தப்படுகின்றதென்பதை அவர் அறிவாரா என்பதையும்;

(ii) மேற்படி விவசாயப் பண்ணைகள் அமைந்துள்ள இடங்கள், மாவட்டங்கள் மற்றும் பிரதேச செயலகங்கள் வெவ்வேறாக யாவை என்பதையும்;

(iii) இந்த விவசாயப் பண்ணைகளின் பரப்பளவு மற்றும் அவற்றில் பணிபுரிகின்ற ஊழியர்களின் எண்ணிக்கை தொடர்பான விபரங்கள் மாவட்ட வாரியாக வெவ்வேறாக யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் வசிக்கும் மக்களின் அன்றாட இயல்பு வாழ்க்கையில் பாதுகாப்பு படையினரின் தலையீடு காணப்படுகின்றதை அவர் அறிவாரா என்பதையும்;

(ii) இராணுவத்தினால் நடத்தப்படுகின்ற இவ்வாறான விவசாயப் பண்ணைகளில், வடக்கு மாகாண சபையிடம் ஒப்படைக்கப்பட வேண்டிய விவசாயப் பண்ணைகள் இதுவரை ஒப்படைக்கப்படாமைக்கான காரணங்கள் யாவை என்பதையும்;

(iii) குறித்த விவசாயப் பண்ணைகளை ஒப்படைப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படவுள்ள காலப்பகுதி யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

1337/2025

கௌரவ எம். எஸ். உதுமாலெப்பை,— இளைஞர் விவகாரங்கள் மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) அம்பாறை மாவட்டத்தின், 20 பிரதேச செயலகப் பிரிவுகளிலும் பணியாற்றும் விளையாட்டு அலுவலர்களின் பெயர்கள் பிரதேச செயலகப் பிரிவு வாரியாக வெவ்வேறாக யாவை என்பதையும்;

(ii) நீண்டகாலமாக மேற்படி மாவட்டத்தில் விளையாட்டு அலுவலர் பதவியில் 13 வெற்றிடங்கள் காணப்படுவதை அறிவாரா என்பதையும்;

(iii) மேற்படி வெற்றிடங்களை நிரப்புவதற்கு மேற்கொள்ளப்பட்டுள்ள நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) அம்பாறை மாவட்டத்தின், தெஹியத்தகண்டிய தொடக்கம் பானம வரை சிங்கள மக்கள் அதிகளவில் வசிக்கும் பிரதேசங்களுக்கு மாவட்ட இளைஞர் சேவை அலுவலரொருவரும் (சிங்களம்) மற்றும் தமிழ் மக்கள் அதிகளவில் வசிக்கும் பிரதேசங்களுக்கு மாவட்ட இளைஞர் சேவை அலுவலரொருவரும் (தமிழ்) நியமிக்கப்பட்டிருந்த போதிலும் இன்றளவில் தமிழ் மாவட்ட இளைஞர் சேவை அலுவலரொருவர் கடமையில் இல்லை என்பதை அறிவாரா;

(ii) ஆமெனில், மேற்படி பிரதேசங்களுக்கு மாவட்ட இளைஞர் சேவை அலுவலரொருவர் (தமிழ்) நியமிக்கப்படுவாரா;

என்பதையும் அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

1457/2025

கௌரவ துரைராசா ரவிகரன்,— சுகாதாரம் மற்றும் வெகுசன ஊடக அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) முல்லைத்தீவு, மன்னார் மற்றும் வவுனியா ஆகிய மாவட்டங்களிலுள்ள தபால் அலுவலகங்களுக்கு அங்கீகரிக்கப்பட்ட, இன்றளவில் சேவையாற்றுகின்ற மற்றும் வெற்றிடங்களாக காணப்படும் ஆளணியின் எண்ணிக்கை வெவ்வேறாக யாவை என்பதையும்;

(ii) மேற்படி ஆளணி வெற்றிடங்களை நிரப்புவதற்கு மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

(iii) இன்றளவில் பிரதேச தபால் அத்தியட்சகர் அலுவலகங்கள் நிறுவப்படாத மாவட்டங்கள் யாவை என்பதையும்;

(iv) வவுனியாவில் இயங்குகின்ற முல்லைத்தீவு மாவட்டத்துக்குரிய தபால் அத்தியட்சகர் அலுவலகத்தை மீளவும் முல்லைத்தீவில் நிறுவுவதற்கு மேற்கொள்ளப்பட்டுள்ள நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) இன்றளவில் தபால் விநியோக நடவடிக்கைகளுக்கு வாகன வசதிகள் காணப்படாத மாவட்டங்கள் யாவை என்பதையும்;

(ii) வினைத்திறனுடன் கூடிய தபால் சேவையினை வழங்குவதற்கு மேற்படி மாவட்டங்களுக்கு வாகன/போக்குவரத்து வசதிகளை வழங்குவதற்கு மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

1471/2025

கௌரவ சானக மாதுகொட,— சுற்றாடல் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) தெஹிவளை, தேசிய மிருகக்காட்சிச்சாலையின் கழிவுகள் முறையாக அகற்றப்படுவதில்லை என்பதை அறிவாரா என்பதையும்;

(ii) மிருகக்காட்சிச்சாலையைப் பார்வையிட வருபவர்கள் உணவருந்துவதற்காக தற்போதுள்ள இடங்கள் அதற்குப் பொருத்தமானவை என்று ஏற்றுக்கொள்வாரா என்பதையும்;

(iii) இன்றேல், அதற்குப் பொருத்தமான இடமொன்றை நிர்மாணிக்க எதிர்பார்க்கப்படுகின்றதா என்பதையும்;

(iv) மிருகக்காட்சிச்சாலையின் மாத வருமானம் மற்றும் செலவு வெவ்வேறாக எவ்வளவு என்பதையும்;

(v) எதிர்காலத்தில் மிருகக்காட்சிச்சாலையில் மேற்கொள்ளப்படவுள்ள நவீனமயப்படுத்தற் பணிகள் யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

1823/2026

கௌரவ (டாக்டர்) பத்மநாதன் சத்தியலிங்கம்,— வீடமைப்பு, நிர்மாணிப்பு மற்றும் நீர்வழங்கல் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) வவுனியா மாவட்டத்தில் சமுதாய நீர்வழங்கல் கருத்திட்டங்கள் அமுல்படுத்தப்படுகின்றனவா;

(ii) ஆமெனில், தற்போது அமுல்படுத்தப்பட்டு வருகின்ற கருத்திட்டங்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(iii) மேற்படி கருத்திட்டங்கள் பற்றிய தகவல்கள் யாவையென்பதையும்;

(iv) மேற்படி கருத்திட்டங்களில் மக்களுக்கான நீர்வழங்கல் கருத்திட்டங்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(v) மேற்படி நீர்வழங்கல் கருத்திட்டங்களினால் பயனடையும் பிரதேசங்கள் யாவையென்பதையும்;

(vi) தற்போது அமுலாக்கப்படாத நிலையிலுள்ள நீர்வழங்கல் கருத்திட்டங்கள் உள்ளனவா என்பதையும்;

(vii) ஆமெனில், அக்கருத்திட்டங்கள் யாவையென்பதையும்;

(viii) மேற்படி கருத்திட்டங்கள் அமுலாக்கப்படாமைக்கான காரணங்கள் யாவையென்தையும்;

(ix) அவ்வாறு அமுலாக்கப்படாத கருத்திட்டங்களை செயற்பாட்டிற்குக் கொண்டுவர நடவடிக்கை மேற்கொள்ளப்படுமா என்தையும்;

(x) ஆமெனில், அந்த திகதி யாதென்தையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

1854/2026

கௌரவ ரொஷான் அக்மீமன,— வர்த்தக, வாணிப, உணவுப் பாதுகாப்பு மற்றும் கூட்டுறவு அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) திருகோணமலை மாவட்டத்தின் திருகோணமலை நகரம் மற்றும் கடவத் பிரதேச செயலாளர் பிரிவில் அமைந்துள்ள தான்யகம பிரதேசத்தில் உணவு ஆணையாளர் திணைக்களத்திற்குச் சொந்தமான வீட்டுத் தொகுதியொன்று உள்ளது என்பதையும்;

(ii) மேற்படி வீட்டுத் தொகுதி முறையாக நிருவகிக்கப்படுவதில்லை என்பதையும்;

அவர் அறிவாரா?

(ஆ) (i) மேற்படி வீட்டுத் தொகுதியில் தற்போதுள்ள வீட்டு அலகுகளின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(ii) அவ்வீடுகளை வழங்கும் வழிமுறை மற்றும் அளவுகோல்கள் யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

---

## 2026 மே 08, வெள்ளிக்கிழமை

## வாய்மூல விடைக்கான வினாக்கள்

27/2024

கௌரவ ஹேஷா விதானகே அங்கும்புர ஆரச்சி,— பொதுநிர்வாக, மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) அனைத்து பிரதேச சபைகளிலும் அதன் சொத்துகள் தொடர்பான தகவல்களை திட்டவட்டமாக குறித்துரைக்கும் ஆவணமொன்று இருக்க வேண்டுமென்பதையும்;

(ii) பெரும்பாலான பிரதேச சபைகளில் அவ்வாறான ஆவணமொன்றில்லை என்பதையும்;

அவர் ஏற்றுக்கொள்வாரா?

(ஆ) ஆமெனில், அது தொடர்பாக மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் யாவை என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

1543/2025

கௌரவ (கலாநிதி) நந்தன மில்லகல,— போக்குவரத்து, நெடுஞ்சாலைகள் மற்றும் நகர அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) கேகாலை மாவட்டத்தில் யட்டியாந்தோட்டையிலிருந்து சீபோத், நாகஸ்தென்ன ஊடாக நாவலப்பிட்டி வரை செல்லும் வீதி சுமார் 20 வருடங்களாக புனரமைக்கப்படாமைக்கான காரணங்கள் யாவை என்பதையும்;

(ii) கொழும்பிலிருந்து நாவலப்பிட்டி வரையான மாற்று வீதியாக மேற்படி வீதியைப் பயன்படுத்தலாம் என்பதை அறிவாரா என்பதையும்;

(iii) மேற்படி வீதியின் 9ஆவது கிலோ மீட்டரிலிருந்து அபிவிருத்தி செய்வதற்கு வீதி அபிவிருத்தி அதிகார சபையினால் திட்டமிடப்பட்டிருந்ததா என்பதையும்;

(iv) அதற்காக ஒதுக்கப்பட்ட தொகை எவ்வளவு என்பதையும்;

(v) அந்த அபிவிருத்தி பணிகள் முறையாக இடம்பெற்றுள்ளனவா என்பதையும்;

(vi) அதன்போது முறையான பெறுகை வழிமுறைகள் பின்பற்றப்பட்டுள்ளனவா என்பதையும்;

(vii) மேற்படி வீதியின் அபிவிருத்தி பணிகள் துரிதமாக முன்னெடுக்கப்படுமா என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

1642/2025

கௌரவ இம்ரான் மகரூப்,— இளைஞர் விவகாரங்கள் மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இலங்கையிலுள்ள சர்வதேச கிரிக்கெட் மைதானங்களின் எண்ணிக்கை மாகாண வாரியாக வெவ்வேறாக யாது;

(ii) வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் எதிர்காலத்தில் புதிய கிரிக்கெட் மைதானங்களை நிர்மாணிக்கத் திட்டமிடப்பட்டுள்ளதா;

(iii) ஆமெனில், மேற்படி கிரிக்கெட் மைதானங்களை நிர்மாணிக்கத் திட்டமிடப்பட்டுள்ள பிரதேசங்கள் யாவை;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் திறமையான கிரிக்கெட் வீரர்கள் உள்ளார்கள் என்பதை அறிவாரா;

(ii) ஆமெனில், அவர்களை இனங்கண்டு தேசிய அணியில் இணைத்துக் கொள்வதற்குள்ள வேலைத்திட்டம் யாது;

என்பதையும் அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

1756/2025

கௌரவ எம். எஸ். அப்துல் வாஸித்,— கமத்தொழில், கால்நடை வளங்கள், காணி மற்றும் நீர்ப்பாசன அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) காணியற்றவர்களுக்கு காணிகளை வழங்கவும் மற்றும் அவ்வாறு வழங்கப்படும் காணிகளுக்கு காணி அனுமதிப்பத்திரங்களை வழங்குவதற்குமாக 2008/4ஆம் இலக்கச் சுற்றறிக்கை நடைமுறையில் உள்ளதை அறிவாரா என்பதையும்;

(ii) ஆமெனில், மேற்படி சுற்றறிக்கைக்கு அமைவாக பொத்துவில் பிரதேச செயலாளர் பிரிவில் 1,2,3,4 மற்றும் 5 கட்டங்களின் கீழ் விண்ணப்பித்தவர்களின் எண்ணிக்கை மற்றும் வழங்கியுள்ள புதிய காணி அனுமதிப்பத்திரங்களின் எண்ணிக்கை ஒவ்வொரு கட்டங்களின் அடிப்படையில் வெவ்வேறாக யாதென்பதையும்;

(iii) மேற்படி சுற்றறிக்கைக்கு அமைவாக கடந்த 17 வருட காலப்பகுதியில் பொத்துவில் பிரதேச செயலகப் பிரிவால் வழங்கப்பட்டுள்ள புதிய அனுமதிப்பத்திரங்களின் மொத்த எண்ணிக்கை யாது என்பதையும்;

(iv) மேற்படி சுற்றறிக்கைக்கு அமைவாக விண்ணபித்துள்ள போதிலும், இது வரையில் வழங்கப்படாதுள்ள காணி அனுமதிப்பத்திரங்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(v) கிழக்கு மாகாண காணி நிர்ணயத் திணைக்களத்தால் விதந்துரைக்கப்பட்டு பொத்துவில் பிரதேச செயலகத்திற்கு ஆற்றுப்படுத்தியுள்ள போதிலும், இது வரையில் வழங்கப்படாதுள்ள அனுமதிப்பத்திரங்களின் எண்ணிக்கை யாது என்பதையும்;

(vi) மேற்படி காணி அனுமதிப்பத்திரங்களை வழங்காது நிறுத்தி வைத்திருப்பதில் தாக்கம் செலுத்தியுள்ள காரணங்கள் யாவையென்பதையும்;

(vii) குறித்த அனுமதிப்பத்திரங்களை தகுதியானவர்களுக்கு மிகத் துரிதமாக வழங்குவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுமா என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

1786/2025

கௌரவ மேஜர் ஜெனரல் (ஓய்வுபெற்ற) ஜீ.டி. சூரியபண்டார,— போக்குவரத்து, நெடுஞ்சாலைகள் மற்றும் நகர அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) தற்போது இலங்கையில் பதிவு செய்யப்பட்டுள்ள வாகனங்களின் எண்ணிக்கை, ஒவ்வொரு வாகன வகையின் அடிப்படையில் வெவ்வேறாக யாதென்பதையும்;

(ii) வாகனப் புகை வெளியேற்றப் பரிசோதனைகளை நடத்தும் நிறுவனங்களிடமிருந்து அரசாங்கத்திற்கு வருடாந்தம் கிடைக்கப் பெறும் வருமானம் ஒவ்வொரு நிறுவனத்தின் அடிப்படையில் வெவ்வேறாக எவ்வளவென்பதையும்;

(iii) வாகனப் போக்குவரத்து நெரிசலைக் குறைப்பதற்காக வகுத்துள்ள எதிர்காலத் திட்டங்கள் யாவையென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

1790/2025

கௌரவ பீ. ஆரியவங்ஷ,— பிரதம அமைச்சர் மற்றும் கல்வி, உயர் கல்வி மற்றும் தொழிற் கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இரத்தினபுரி மாவட்டத்திலுள்ள தமிழ்மொழி மூல பாடசாலைகளின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(ii) அந்தப் பாடசாலைகளின் பெயர்கள் யாவையென்பதையும்;

(iii) அந்தப் பாடசாலைகளில் நிலவும் ஆசிரியர் வெற்றிடங்களின் எண்ணிக்கை ஒவ்வொரு பாடத்திற்கமைய வெவ்வேறாக யாதென்பதையும்;

(iv) மேற்படி வெற்றிடங்களை நிரப்புவதற்கு மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் யாவையென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

1831/2026

கௌரவ கந்தசாமி பிரபு,— கைத்தொழில் மற்றும் தொழில் முயற்சியாண்மை அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) மட்டக்களப்பு மாவட்டத்திற்கு 2025/2026 ஆண்டிற்கென முன்மொழியப்பட்டுள்ள சிறிய மற்றும் நடுத்தர கைத்தொழில் வலயத்தின் தற்போதைய நிலைமை யாது;

(ii) கைத்தொழில் அபிவிருத்திச் சபையின் மட்டக்களப்பு கிளையினூடாக இவ்வருடத்தில் தொழில்நுட்பப் பயிற்சி பெற்றுள்ள உள்ளூர் தொழில்முயற்சியாளர்களின் எண்ணிக்கை யாது;

(iii) மட்டக்களப்பு மாவட்டத்தில் சிறிய மற்றும் நடுத்தர கைத்தறித் தொழில் களுக்கான சந்தை வாய்ப்புக்களை இலகுபடுத்துவதற்காக எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகள் யாவை;

(iv) சிறிய மற்றும் நடுத்தர கைத்தொழில்களுக்காக வழங்கப்பட்டுள்ள குறைந்த வட்டி வீதத்திலான கடன்களின் மொத்தப் பெறுமதி யாது;

(v) கிழக்கு மாகாணத்தில் விவசாய உற்பத்தி சார்ந்த சிறிய மற்றும் நடுத்தர கைத்தொழில்களுக்கு விசேட வரிச் சலுகைகளை வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதா;

(vi) மட்டக்களப்பு மாவட்டத்தில் நெருக்கடிகளுக்கு முகம் கொடுத்துள்ள தொழில்முயற்சியாளர்களுக்கான 'SME பிணை நிதியத்தின்' தற்போதைய முன்னேற்றம் யாது;

(vii) மேற்படி மாவட்டத்தில் பிராந்திய பொதியிடல் மத்திய நிலையமொன்றை அமைப்பதற்கான திட்டம் ஏதேனும் உள்ளதா;

(viii) இறக்குமதி மாற்றீடுகளிலிருந்து உள்ளூர், சிறிய மற்றும் நடுத்தர கைத்தொழில்களைப் பாதுகாப்பதற்காக எடுக்கப்படும் நடவடிக்கைகள் யாவை;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

1906/2026

கௌரவ ஆர்.ஜீ. விஜேரத்ன,— புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) ஹங்குரன்கெத்த பிரதேச செயலகப் பிரிவின் பல்லேமளுவ கிராம அலுவலர் பிரிவில் 43 குடும்பங்கள் வசித்துவரும் பிரதேசமானது தொல்பொருள் பாதுகாப்பு வலயமாக வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டுள்ளது என்பதை அறிவாரா என்பதையும்;

(ii) அதன் காரணமாக அப்பிரதேச மக்களின் இயல்பு வாழ்க்கையில் தடைகள் ஏற்பட்டுள்ளதென்பதை ஏற்றுக்கொள்வாரா என்பதையும்;

(iii) புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சின் இணக்கம் கிடைக்காமையின் காரணமாக மேற்படி காணிகளுக்கு காணி மறுசீரமைப்பு ஆணைக்குழுவினால் உறுதிகள் வழங்கப்படுவது தாமதமாகியுள்ளது என்பதை அறிவாரா என்பதையும்;

(iv) இந்த விடயம் தொடர்பாக ஏதேனும் நிவாரண நடவடிக்கை மேற்கொள்ளப்படுமா என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

1920/2026

கௌரவ (கலாநிதி) ஹர்ஷ டி சில்வா,— போக்குவரத்து, நெடுஞ்சாலைகள் மற்றும் நகர அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) அங்கம்பிட்டிய வீதி, எத்துல்கோட்டை மற்றும் பாடசாலை வீதி, இராஜகிரிய ஆகியவற்றை நாவலையில் இணைத்து இராஜகிரிய, நாவல கால்வாய்க்கு குறுக்கே புதிய பாலமொன்றை நிர்மாணிப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுவதை அவர் அறிவாரா;

(ii) மேற்படி பாலம் நிர்மாணிக்கப்படும் பிரதேசமானது உயிரியல் பல்வகைத்தன்மை மற்றும் தொல்பொருளியல் ரீதியில் மிகவும் கூறுணர்வுமிக்கதொரு வலயம் என்பதை அவர் அறிவாரா;

(iii) ஆமெனில், மேற்படி பாலத்தை நிர்மாணிப்பதற்குத் தேவையான சூழல், போக்குவரத்து நெரிசல், சமூக – பொருளாதார மற்றும் தொல்பொருளியல் சார்ந்த தாக்க அறிக்கைகள் பெற்றுக்கொள்ளப்பட்டுள்ளனவா;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

1940/2026

கௌரவ தர்மப்பிரிய திசாநாயக்க,— வீடமைப்பு, நிர்மாணிப்பு மற்றும் நீர்வழங்கல் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) சமுதாய நீர்வழங்கல் கருத்திட்டங்களைச் செயற்படுத்துவதற்கு பின்பற்றப்படும் முறைமை யாது என்பதையும்;

(ii) மேற்படி கருத்திட்டங்களை ஆரம்பிக்கும் போது அரசாங்கத்தின் தலையீடும் கிராமிய சமுதாயப் பங்களிப்பும் யாது என்பதையும்;

(iii) மேற்படி கருத்திட்டங்களை முன்னெடுக்கும் சமுதாய நீர்க் குழுக்களின்/ சங்கங்களின் கட்டமைப்பும் பொறுப்பும் யாதென்பதையும்;

(iv) மேற்படி கருத்திட்டங்களில் அரச நிறுவனங்கள், பிரதேச செயலகங்கள் மற்றும் உள்ளூர் அதிகார சபைகள் தலையீடுசெய்வதற்கான ஒரு முறைமை காணப்படுகின்றதா என்பதையும்;

(v) இன்றேல், அதற்கான காரணங்கள் யாவையென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) சமுதாய நீர்க் கருத்திட்டங்களின் ஒழுங்குறுத்துகைக்கும் கணக்காய்விற்கும் பயன்படுத்தப்படும் முறைமை யாதென்பதையும்;

(ii) இதுவரை மேற்கொள்ளப்பட்ட கணக்காய்வுகளின் மூலம் அறியக் கிடைத்த விடயங்கள் தொடர்பில் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளனவா என்பதையும்;

(iii) ஆமெனில், மேற்படி நடவடிக்கைகள் யாவையென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

# திகதி குறிக்கப்படாத பிரேரணை முன்னறிவித்தல்

பா. 111/2026

கௌரவ சஜித் பிரேமதாச
கௌரவ ஆர். எம். ரஞ்சித் மத்தும பண்டார
கௌரவ கயந்த கருணாதிலக்க
கௌரவ திலிப் வெதஆரச்சி
கௌரவ ரவி கருணாநாயக்க
கௌரவ அஜித் பி. பெரேரா
கௌரவ கிங்ஸ் நெல்சன்
கௌரவ (கலாநிதி) ஹர்ஷ த சில்வா
கௌரவ ஹேஷா விதானகே அங்கும்புர ஆரச்சி
கௌரவ முஜிபுர் ரஹுமான்
கௌரவ ஜே.சீ. அலவத்துவல
கௌரவ டப்ளியூ.எச்.எம். தர்மசேன
கௌரவ டி.வீ. சானக
கௌரவ (டாக்டர்) இராமநாதன் அர்ச்சுனா
கௌரவ சட்டத்தரணி சித்ரால் பெர்னாந்து
கௌரவ ஹெக்டர் அப்புஹாமி
கௌரவ பீ. ஆரியவங்ஷ
கௌரவ ஹர்ஷன ராஜகருணா
கௌரவ இம்ரான் மகரூப்
கௌரவ சுரங்க ரத்நாயக்க
கௌரவ சதுர கலப்பத்தி
கௌரவ திலித் ஜயவீர
கௌரவ கே. சுஜித் சஞ்ஜய பெரேரா
கௌரவ (திருமதி) ரோஹினீ குமாரி விஜேரத்ன
கௌரவ சமிந்த விஜேசிறி
கௌரவ (கலாநிதி) வீ.எஸ். இராதாகிருஷ்ணன்
கௌரவ நயன வாசலதிலக
கௌரவ நலீன் பண்டார ஜயமஹ
கௌரவ எஸ்.எம். மரிக்கார்
கௌரவ எம்.எஸ். உதுமாலெப்பை
கௌரவ எம்.எஸ் அப்துல் வாசித்
கௌரவ சட்டத்தரணி அர்ஜுன சுஜீவ சேனசிங்ஹ
கௌரவ சட்டத்தரணி அநுராத ஜயரத்ன
கௌரவ சாமர சம்பத் தசநாயக
கௌரவ ஜகத் விதான

கௌரவ சட்டத்தரணி ரஊப் ஹகீம்,— வலுசக்தி அமைச்சர் கௌரவ குமார ஜயக்கொடி அவர்களுக்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணை,— பாராளுமன்ற உறுப்பினர்களுக்கான நடத்தைக் கோவையின் - பாகம் III, பிரிவு 6 இல்,

"உறுப்பினர்கள் எல்லா சந்தர்ப்பங்களிலும் தம்மீது ஒப்படைக்கப்பட்ட பகிரங்க நம்பிக்கைக்கிணங்க செயலாற்றுதல் வேண்டும் என்பதுடன் எவையேனும் பொது வளங்களை பயன்படுத்துவது உட்பட அவர்களின் நடவடிக்கை எப்போதும் நேர்மையுடனும் ஒருமைப்பாட்டுடனும் இருத்தல் வேண்டும்."

என்று குறிப்பிடப்பட்டிருந்த போதிலும், அது மீறப்பட்டுள்ளதாலும்;

பாராளுமன்ற உறுப்பினர்களுக்கான நடத்தைக் கோவையின் பாகம் V, பிரிவு 9 இல் கூறப்பட்டுள்ள நடத்தை விதிகளான:

“(அ) மனச்சாட்சிப்படி நடத்தல்”,

“(இ) மக்களின் நம்பிக்கை மற்றும் மதிப்பைச் சிறப்பிக்கும் வண்ணம் செயற்படுதல்”,

“(உ) அவர்கள் பதிலிறுக்கக்கூடியதான நடத்தை மற்றும் கடமைகள் தொடர்பாக பொறுப்புடன் செயற்படுதல்”,

என்ற நடத்தை விதிகள் மீறப்பட்டுள்ளன என முதற்தோற்ற நிலையில் உறுதிப்படுத்தப்படுவதாலும்;

மேலும், அரசியலமைப்பின் 28 ஆம் உறுப்புரையின் பிரகாரம் அடிப்படைக் கடமைகளை நிறைவேற்றுவதிலிருந்து அமைச்சரவை அமைச்சர் என்ற வகையில் தவறியுள்ளதாக அவதானிக்கப்படுவதாலும்;

மேலும், நுரைச்சோலை லக்விஜய நிலக்கரி மின் உற்பத்தி நிலையத்திற்குப் போதுமான மற்றும் தரமான நிலக்கரி பெறுகையை உறுதிப்படுத்துவதில் வலுசக்தி அமைச்சர் தமது அடிப்படைக் கடமையை நிறைவேற்றத் தவறியுள்ளார் என்பது உறுதிப்படுத்தப்படுவதாலும்;

தீர்மானகரமான தேசிய வலுசக்தி சொத்தைக் கண்காணிக்கும் பணியில் இத்தகைய கடுமையான அலட்சியமானது, அமைச்சர் ஒருவரின் பொறுப்பு என்ற அடிப்படையில் மீறப்பட்டுள்ளதாலும்;

மேலும், இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் 2024 நவம்பர் 25 ஆம் திகதிய 2412/08 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையின் மூலம் வலுசக்தி அமைச்சருக்கு ஒப்படைக்கப்பட்டுள்ள நிறுவனங்கள் முகாமைத்துவ மட்டத்தில் ஏற்படும் நட்டங்கள் மற்றும் மின் பிறப்பாக்க மற்றும் விநியோக முறைமைக்கு ஏற்படும் தொழில்நுட்ப ரீதியான பாதிப்புக்களைக் குறைப்பதற்குத் தேவையான நடவடிக்கைகள் எடுத்தல் மற்றும் மின் உற்பத்திக்காக செலவிடப்படும் செலவினைக் குறைத்தல் மற்றும் உற்பத்தியின் போது ஏற்படும் நிச்சயமற்ற தன்மையை அகற்றுதல் என்னும் விடயங்களையும் பணிகளையும் நிறைவேற்றுவதில் தவறியுள்ளதாலும்;

தற்போதைய வலுசக்தி அமைச்சர், இலங்கை உரக் கம்பனியின் பெறுகை முகாமையாளராக பணியாற்றியபோது ஊழல் செயல்பாடு ஒன்றை மேற்கொண்டதற்காக அவருக்கு எதிராக இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சார்த்துதல்களைப் புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழுவினால் (26 ஆம் அத்தியாயமான) இலஞ்சச் சட்டத்தின் 70 ஆம் பிரிவின் கீழ் "ஊழல் தவறு " தொடர்பாக குற்றஞ்சாட்டி கொழும்பு மேல் நீதிமன்றில் முறையான குற்றப்பகர்வுப்பத்திரமொன்று தாக்கல் செய்யப்பட்டுள்ளதாலும்; மற்றும்

மேற்குறிப்பிட்ட காரணங்களுக்கு அமைவாக அரச நிதி இழப்பு, தேசிய வலுசக்தி பாதுகாப்பை அபாயத்தில் ஆழ்த்துதல், ஊழல் முறையில் பெறுகை செயல்முறையை கையாளுதல், "ஊழல் தவறு" தொடர்பாக செயலில் உள்ள நீதிமன்ற நடவடிக்கைகளுக்கு உட்படுதல் மற்றும் அரசாங்கத்தின் "ஊழல் எதிர்ப்பு மக்கள்ஆணையை" காட்டிக் கொடுத்தல் ஆகியவற்றின் மூலம் வலுசக்தி அமைச்சர் பாராளுமன்றத்தினதும் இலங்கை மக்களினதும் நம்பிக்கையை திரும்ப பெற முடியாத வகையில் இழந்துள்ளார் என்பதும், அவர் தொடர்ந்தும் வலுசக்தி அமைச்சர் பதவியில் இருப்பது பொது நலனுக்கும், சட்டத்தின் ஆட்சிக்கும், நல்லாட்சி கோட்பாடுகளுக்கும் எதிரானது என்பதாலும்;

வலுசக்தி அமைச்சர் கௌரவ குமார ஜயக்கொடி அவர்கள் தொடர்ந்தும் அமைச்சரவையின் அமைச்சரொருவராக பதவி வகிப்பதற்கான இயலுமை தொடர்பில் நம்பிக்கையை இழந்திருப்பதாக இப்பாராளுமன்றம் தீர்மானம் நிறைவேற்றுமாக.